பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

29 07 2024 **MONDAY** 6 30 **PM**

வணக்கம் – மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கல்வித்துறையின் வளர்ச்சியில் தேசிய கல்விக் கொள்கை பெரிய அளவு மாற்றத்தை கொண்டு வந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. தக்காளி விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் 2 ஆயிரத்து 553 மருத்துவர்களை நியமனம் செய்வதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. நீலகிரி கோவை உள்ளிட்ட ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில இந்தியாவின் மனுபாக்கர் – **Sarabjot Singh** இணை வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

கல்வித்துறையின் வளர்ச்சியில் தேசிய கல்விக் கொள்கை பெரிய அளவு மாற்றத்தை கொண்டு வந்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை செயல்பாட்டிற்கு வந்ததன், நான்காவது ஆண்டு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டு இந்த கொள்கை கொண்டுவரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதனை முழுமையாக செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>><<<<**

பெட்ரோல் – டீசல் விலை, பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் நம் நாட்டில் குறைவாக உள்ளது என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்த அவர், பெட்ரோல் மீதான கலால் வரியை மத்திய அரசு மூன்று முறை குறைத்துள்ளதாக கூறினார்.

அடுத்த 7 ஆண்டுகளுக்குள் பெட்ரோலுடன் 25 சதவீத எத்தனாலை கலக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்தார்.

**>>>><<<<**

தக்காளி விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் குறைந்த விலையில் தக்காளி விற்பனையை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தேசிய கூட்டுறவு நுகர்வோர் அமைப்பின் மூலம் குறைந்த விலையில் தக்காளி வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவதற்கென மத்திய அரசு நிதியம் ஒன்றை ஏற்படுத்தியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், தக்காளி விலையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படவில்லை என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

>>>><<<<

பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி, இந்த திட்டத்திற்காக கடந்த ஐந்தாண்டுகளில் 4 ஆயிரத்து 906 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்றார்.

>>>><<<<

ஆவின் நிறுவனத்தின் சார்பில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சென்னையில் காணொலி வாயிலாக நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>><<<<

மருத்துவத்துறையில் பல முன்னோடி திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

தமிழ்நாடு மருத்துவ குழுமத்தின் சிறந்த மருத்துவர்களுக்கான விருதுகளை, இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி அவர் பேசினார்.

கோவிட் பாதிப்பு காலத்தில் மருத்துவர்கள் ஆற்றிய பணி மகத்தானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனை கருத்தில் கொண்டு தான் தமிழக அரசு இந்த துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் 2 ஆயிரத்து 553 மருத்துவர்களை நியமனம் செய்வதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

>>>><<<<

நீலகிரி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப்பகுதிகளில் சீரான மின்விநியோகத்தை உறுதி செய்வது தொடர்பாக மாநில மின்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு காணொலி வாயிலாக அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இப்பகுதிகளில் கனமழை பெய்து வருவதை அடுத்து அமைச்சர் இந்த ஆலோசனையை மேற்கொண்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இப்பகுதிகளில் கனமழை நீடித்த போதிலும் சீரான மின்விநியோகம் வழங்கப்பட்டு வருவதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மின்விநியோகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணிகளை அதிகாரிகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அறிவுறுத்தியதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - அன்பில் மகேஸ் 25 செகண்ட்ஸ்)

>>>><<<<

நீலகிரி, கோவை உள்ளிட்ட ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 34 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை நாளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 35 செகண்ட்ஸ்)

>>>><<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

இன்று சென்னையில், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

எஞ்சியுள்ள பகுதிகளில் இன்னும் 15 நாட்களில் இப்பணிகள் நிறைவடையும் என்றும் அவர் கூறினார்.

மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காவண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக குறை கூறினார்.

கள்ளச்சாராயத்தை தடுப்பதிலும் உறுதியான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் மீது பொய்வழக்குகளை போடுவதில் தான் திமுக அரசு கவனம் செலுத்துவதாகவும் திரு. சி.வி. சண்முகம் கூறினார்.

>>>><<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று பிஜேபி மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் குற்றங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக குறிப்பிட்டார்.

மத்திய பட்ஜெட் குறித்து, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தவறான தகவல்களை தெரிவித்து வருவதாக திருமதி. வானதி சீனிவாசன் கூறினார்.

>>>><<<<

<u>மாவட்டச் செய்திகள்</u>

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் திரு. நாராயணன் வலியுறுத்தினார்.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

>>>><<<<

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆட்சியர் திருமதி. உமா இன்று திறந்து வைத்தார்.

>>>><<<<

மயிலாடுதுறை மாவட்டத்தில் அரசு பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா சீருடைகளை ஆட்சியர் திரு. மஹாபாரதி இன்று வழங்கினார்.

>>>><<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 7 நாட்களில் 16 பேர் குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் - **Sarabjot Singh** இணை, வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.
10 மீட்டர் கலப்பு குழுப் பிரிவின் இறுதியாட்டத்திற்கான தகுதிச் சுற்றில் இந்த இணை, 3-வது இடத்தை பிடித்ததன் மூலம் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியது.
ஹாக்கிப் போட்டியில் இந்தியா-அர்ஜென்டினா இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.
பேட்மிண்டன் போட்டியில் லக்ஷயா சென் 21-19, 21-14 என்ற செட்கணக்கில் பெல்ஜியத்தின் **Julien Carraggi** –யை வென்றார்.

>>>><<<<

ஈரானில் நடைபெற்ற இயற்பியல் ஒலிம்பியாட்டில் இந்தியா 2 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

>>>>**END**<<<<